DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 289/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of August 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | நரியனேந்தல் |
| பெயர் | : | பெரியசாமி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | சாமியார் | சமயம் | : | இந்து |
| வயது | : | 64 | ஜாதி | : | அம்பலக்காரர் |
| தொழில் | : | ரேசன் கடையில் தற்காலிக வேலை | | | |

<u>நாள்: 20.08.2024</u>
<u>நேரம்: 04.25</u>

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து ரேசன் கடையில் தற்காலிக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1 எனக்கு யார் என்று தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**
**<u>அரசுதரப்பு கு.வி</u>.**

கடந்த 24.10.2022 ம் தேதி மாலை 04.00 மணியளவில் அ.சா.1 கொல்லையில் பால் கரந்துவிட்டு சுப்பிரமணி வீட்டருகே வந்து

கொண்டிருந்தபோது எதிரிகள் முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி 1ம் எதிரி கையில் வைத்திருந்த கம்பால் அ.சா.1 முகுகில் அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. அப்போது அருகில் இருந்த சுப்பிரமணியன் ஓடி வந்து விலக்கியபோது 3ம் எதிரி அ.சா.1 அசிங்கமாக பேசி கம்பால் அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. அப்போது வலது கையால் தடுத்த போது வலது கையில் அடிபட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 4ம் எதிரி கையில் வைத்திருந்த விலக்கமாரால் அ.சா.1 தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 மனைவியை எதிரிகள் அசிங்கமாக பேசி 1ம் எதிரி வலது கண்ணத்தில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்த நானும், ஊர்க்காரர்களும் சத்தம் போடு விலக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. தற்போது எதிரி எங்கள் ஊரை சேர்ந்தர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.08.20 18:04:01 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 289/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of August 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 5** | கிராமம் | : | மேலசீத்தை |
| பெயர் | : | கண்ணதாசன் | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | கோவிந்தராஜ் | சமயம் | : | இந்து |
| வயது | : | 40 | ஜாதி | : | தேவேந்திர குல வேளாளர் |
| தொழில் | : | ஆசிரியர் | | | |

நாள்: 20.08.2024
நேரம்: 04.25

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1 எனது சகோதரர். 24.10.2022 ம் தேதி தீபாவளி அன்று நான் எனது ஊரில் இருந்தேன். சக்திவேல் மகள் சிவரஞ்சணி எனக்கு போன் செய்து எதிரிகள் எனது அப்பாவை அடிப்பதாக சொன்னார். அதன் பிறகு எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சம்பவம் நடந்த நரியனேந்தல் கிராமத்திற்கு சென்றேன். அதன் பிறகு அ.சா.1 என்னிடம் புகார் கொடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்திற்கு வரசொன்னார்கள். நான் அவருக்கு காவல் நிலையத்திற்கு உதவியாக சென்றேன். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு எனது அண்ணனை அவரது மாமனார் பாண்டியுடன் சென்று சேர்த்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு எத்தனை மணிக்கு வழக்கு சம்பவம் குறித்து போன் மூலமாக தகவல் வந்தது என்றால் 04.45 மணியளவில் வந்தது. எங்கள் ஊரில் இருந்து சம்பவ இடம் எத்தனை கீ.மீ தூரம் உள்ளது என்றால் 35 கீ.மீ. நான் எத்தனை மணிக்கு நரியனேந்தல் கிராமம் வந்தேன் என்றால் மாலை 06.00 வந்தேன். நான் நரியனேந்தல் வந்து நேரடியாக அ.சா.2 வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் அரை மணி நேரம் கழித்து சென்றேன். நான் செல்வதற்கு முன்பாகவே எனது அண்ணனும், மாமனாரும் சென்றுவிட்டார்கள். நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாகவே புகார் கொடுக்கப்பட்டதா அல்லது காவல் நிலையத்திற்கு சென்ற பிறகு புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகாரை நான்தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அ.சா.1 சொல்ல சொல்ல நான் எழுதிக்கொடுத்தேன். அதில் சாட்சி கையெழுத்து நான் செய்தானா அல்லது எனது மாமனார் அ.சா.2 செய்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதன் பின்பு எத்தனை மணிக்கு மருத்துவமனை சென்றோம் என்றால் இரவு சுமார் 10.00 மணியளவில் சென்றோம். அது வரையிலும் நாங்கள் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் சரியல்ல. வீட்டிற்கு வந்துவிட்டோம். எனது அண்ணன் வீட்டில் இருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 18 கீ.மீ தூரத்தில் உள்ளது. மருத்துவமனைக்கு செல்வதாக இருந்தால் எங்கள் வீட்டில் இருந்து அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். அதற்கு இடைப்பட்ட நேரத்தில் தேவிப்பட்டிணம் அரசு மருத்துவமனையில் எந்த முதலுதவி சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை ்என்றால் சரிதான். நான் அந்த தேதியில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எனது அண்ணனுடன் காவல் நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது அண்ணனுக்கும் எதிரிகளுக்கும் உள்ள சொத்து பிரச்சனையை மனதில் வைத்து எனது அண்ணன் ஒரு பொய்யான புகார் கொடுத்து அதற்கு சாட்சியாக என்னை சேர்த்துள்ளார் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவமே நடைபெறவில்லை என்பதால்தான் நான் முன்னுக்குபின் முரணான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.08.20 18:04:08 +0530